தமிழ்நாடு முழுவதும் – இன்று முதல்

த.வெ.க. அரசைக் கண்டித்து மின்வாரிய தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்!

மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிவிப்பு!

சென்னை, அக். 13-

தமிழ்நாடு மின்வாரியம் தனியார் மயமாக்க முயற்சிக்கும் தவெக அரசை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பாக இன்று முதல் தொடர் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மின் கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழக மக்களையும், தொழிலாளர்களையும் வஞ்சிக்கும் தகுதியற்ற தவெக அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக தொடர் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

த.வெ.க. அரசும், மின்வாரியமும், தமிழ்நாட்டு ஏழை எளிய மக்களையும், விவசாயிகளையும், வணிகர்களையும் வஞ்சிப்பதோடு, இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறித்து சமூக நீதியை சீர்குலைக்கின்ற திட்டமான ஸ்மார்ட் மீட்டர் திட்ட டெண்டர் அறிவிப்பை திரும்ப பெற வலியுறுத்தியும், தவெக அரசு அறிவித்துள்ள தனியார்மய (PPP) மின்உற்பத்தி, மின் வழித்தட திட்டங்களை அரசே ஏற்று நடத்திட வலியுறுத்தியும், மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக தொடர் போராட்டங்கள் நடைபெறுகின்றன.



இன்றும், நாளையும் (அக்டோபர் 13, 14) அனைத்து கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்.

இன்று (13.10.2026) மாலை 5.20 மணிக்கு சென்னை மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு சென்னை கிளைகள் மட்டும் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம்.

15.10.2026 அன்று அனைத்து திட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்.

அக்டோபர் 26 முதல் 31 வரை அனைத்து மின் திட்டங்களிலும் பொது மக்கள் சந்திப்பு இயக்கம்.

02.11.2026-ஆம் தேதிக்கு பிறகு அனைத்து மின்வாரிய பணியாளர்கள் பங்கேற்கும் வேலை நிறுத்தம்.

கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு வகித்த 2021-2026 வரை தமிழக மக்களுக்கும், விவசாயிகளுக்கும் உழைக்கும் வர்க்கமான தொழிலாளர்களுக்கும், வணிகர்களுக்கும், மாணவ - மாணவியர்களுக்கும், குழந்தைகளுக்கும் பொற்காலமாக இருந்தது.

தவெக அரசு பொறுப்பு ஏற்ற இந்த 4 மாதங்களில் மின்வெட்டினால், பொது மக்கள் வீட்டு உபயோக மின்சாரம் இல்லாமல் நிம்மதி / உறக்கம் இழந்துள்ளனர், விவசாயிகள் விளைச்சலை இழந்துள்ளனர். வணிகர்கள், வியாபாரத்தை இழந்துள்ளனர். தொழிலதிபர்கள் தொழிலையும், உற்பத்தியையும் இழந்துள்ளனர், மொத்தத்தில் தமிழ்நாடு இதுவரையில்லாத வகையில் அனைத்துத்துறையிலும், பின்நோக்கி நகர்ந்துள்ளதை அனைவரும் அறிவார்.

அறிவிக்கப்படாத மின்வெட்டு, தற்போது விரிவடைந்து, ஒன்றிய / மாநில அமைச்சர்கள் பங்குபெரும் அரசு நிகழ்ச்சிகளிலுமே மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்திலேயே மின்வெட்டு ஏற்பட்டு, அமைச்சர் அறைகளிலேயே மின்சாரம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

கழக அரசில் 2022ல் எரிசக்தி மானிய கோரிக்கையில் தொழிலாளர் நல பாதுகாக்கும் திராவிட மாடல் ஆட்சி புரிந்த கழகத்தலைவர் அவர்கள், மின்சார வாரியம் பொதுத்துறையாகவே நீடிக்கும் என்ற சட்டமன்றத்திலேயே அறிவித்தார்கள், அறிவிப்பு செய்து மின்வாரியத்தில் பணி செய்பவர்களுக்கும், தமிழக மக்களுக்கு நன்மை புரிந்தார்கள்.

த.வெ.க. அரசு பதவியேற்ற நாள் முதல் மின்வெட்டு ஏற்படுகின்றது. இதற்கான சரியான காரணமும் கூறாமல் சரிசெய்யும் முடியாமல், திணறுகிறது. இது மின்வாரியத்தை தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியே என்ற அச்சம் ஏற்படுகின்றது.

எனவே, த.வெ.க. அரசு, மின்வாரியம் தனியார் மயமாக்கும் முடிவை கைவிட வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி மாபெரும் தொடர் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த கோரிக்கை தாமதமானால் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களுடன் இணைந்து மாபெரும் வேலை நிறுத்த போராட்டம் நடைபெறும்.

இவ்வாறு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொளத்தூர் கிழக்கு பகுதி கழக மூத்த முன்னோடி

68 (அ) வட்ட அவைத் தலைவர் இர.செந்தில்நாதன் மறைவு!

கலாநிதி வீராசாமி எம்.பி. - இரா.கிரிராஜன் எம்.பி. - கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 13

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 68 (அ) வட்டக் கழகத்தில் கடந்த 40 ஆண்டுகாலமாக வட்ட அவைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு கழகப் பொறுப்புகளில் இருந்து இந்த பகுதியில் கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவரும் எஸ்.ஆர்.பி. காலனி குடியிருப்போர் சங்கத்தின் மேனாள் தலைவர் மற்றும் செயலாளருமான, கழகத்தின் மூத்த முன்னோடியும் தீவிர கலைஞர் பக்தருமான இர.செந்தில்நாதன் (வயது 79) அவர்கள் கடந்த (09.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணி அளவில் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார்.



கழக மூத்த முன்னோடி இர.செந்தில்நாதன் அவர்கள் கடந்த 60 ஆண்டு காலமாக இதே பகுதியில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட அனைத்து கழக வேட்பாளர்களின் வெற்றிக்காக அரும்பாடுப்பட்டவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் முன்னணியில் கலந்து கொண்டவர். குறிப்பாக தளபதி அவர்களின் கொளத்தூர் தொகுதியில் தளபதியின் வெற்றிக்காக 2011, 2016, 2021, 2026 ஆகிய தேர்தல்களில் கடுமையாக பாடுபட்டவர். இந்த 2026 தேர்தலிலும் கழகத் தலைவரின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார். கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்த செய்தி கேட்டது முதல் உடல் நலம் அதிகமாக பாதிக்கப்பட்டார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் கழக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், கொளத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன், வட்டச் செயலாளர் பி.டி.சி.ரவி உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் (11.10.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10:30 மணி அளவில், சென்னை, திரு.வி.க. நகர், தாங்கல் இடுகாட்டில் உடல் தகனம் செய்யப்பட்டது.

மயிலை த.வேலு – அன்பகம் கலை திறந்து வைக்கிறார்கள்!

121 அ வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி நினைவஞ்சலி - படத்திறப்பு!

பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, அக். 13-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 அ வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தியின் 16ஆம் நாள் நினைவஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (13.10.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 7.00 மணியளவில் புதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு, சென்னை-5 இல் அவரது இல்லத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்துகின்றனர்.



மயிலை மேற்கு பகுதிச் செயலாளர்கள் நந்தனம் மதி, மயிலை எஸ் முரளி முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே நமது மயிலை தொகுதி சேர்ந்த வட்ட செயலாளர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட அமைப் பாளர்கள், துணை அமைப் பாளர்கள், பகுதி அமைப் பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் இளைஞர் அணி சமூகக் கல்வி அறக்கட்டளையின் சார்பில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கு.அருண் பிரகாஷின் மருத்துவச் செலவிற்கும், பராமரிப்பிற்கும் உதவும் வகையில் வழங்கப்பட்ட ரூ 25,000/க்கான காசோலையை திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், துணை அமைப்பாளர்கள் செ.ராஜசேகர், ஈ.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் மாவட்ட கழக துணை செயலாளர் வழக்கறிஞர் எஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் நா.சோமசுந்தரம் சு. கிருஷ்ணமூர்த்தி உள்ளனர்.

தீர்ப்புக்குத் தலை வணங்குவோம்!
மக்கள் வாக்குக்குத் தலை நிமிருவோம்!

நடந்து முடிந்த இடைத்தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக த.வெ.க அமரலாம். ஆனால் மக்கள் மன்றத்தில் ஆளும் கட்சிக்கு எதிர்ப்பு வாக்குகளே அதிகம். ஆளும் கட்சிக்கு எதிரான அலையே வீசுகிறது.

ஆதவ் அர்ஜுனா, "தி.மு.க.வைக் காட்டிலும் த.வெ.க. இந்த தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகள் கூடுதலாக வாங்கும்" என்றார்.

"75,000 வாக்கு வித்தியாசத்தில் தி.மு.க.வை, த.வெ.க. ஜெயிக்கும்" என செங்கோட்டையன் கூறினார். அப்படி நடந்ததா? தி.மு.க.வுக்கு டெபாசிட் கிடைக்காது என்றார். ஆனால் நடந்தது என்ன?

பக்கத்தில் இருக்கும் பாண்டிச்சேரியைப் பாருங்கள். தட்டாஞ்சாவடியில்

நடைபெற்ற இடைத்தேர்தலில் மொத்த எதிர்கட்சிகளின் வாக்கைச்

சேர்த்தாலும், ரங்கசாமி காங்கிரஸினைத் தொட முடியாது இதுதான் ஆளும்

கட்சிக்கும் அதன் ஆட்சிக்கும் மக்கள் தந்த தீர்ப்பு.

அந்த வகையில் தமிழகத்தில் ஆளும் கட்சிக்கு மதுராந்தகத்தில் கிடைத்த வாக்கு 74,048. எதிர்க்கட்சிகளின் வாக்கு மதுராந்தகத்தில் 1,06,153, ஏறத்தாழ 32 ஆயிரம் வாக்குகள் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியைவிட அதிகமாக பெற்றுள்ளார்கள். ஆக எதிர்ப்பு அலை முப்பதாயிரம் மதுராந்தகத்தில் மட்டும் அதிகம் உள்ளது.

தாராபுரத்தில் த.வெ.க. வாங்கிய வாக்குகள் 66,814. எதிர்க்கட்சிகள் த.வெ.க. ஆட்சியை எதிர்த்து பெற்றது 1,09,075 வாக்குகள்.

ஏறத்தாழ தாராபுரத்தில் மட்டும் 40,000 பேர் த.வெ.க.வை அதிகமாக வெறுக்கும் மக்களைத்தான் த.வெ.க. ஆளுகிறது.

பா.ம.க. தேசிய ஜனநாயக கூட்டணியில் இருப்பதாக சௌமியா சொன்னது உண்மை எனில், அ.தி.மு.க.விற்கு வாக்களித்து இருக்க வேண்டும். அ.தி.மு.க.வுடன் முரண்பாடு இருந்தால் கம்யூனிஸ்ட்டுக்கோ, நாம் தமிழர் கட்சிக்கோ ஆதரவு கொடுத்திருக்க வேண்டும். அதைவிட்டு தேர்தலில் நடுநிலை வகித்திருக்கக்கூடாது.

கடந்தமுறை த.வெ.க.விற்கு வாக்களித்தவர்கள், த.வெ.க.வின் ஆட்சி பிடிக்காததால் தி.மு.க.விற்கு வாக்களித்தார்கள். அ.தி.மு.க.விற்கு கடந்தமுறை சென்ற பா.ம.க.வின் ஓட்டு இந்தமுறை த.வெ.க.விற்குச் சென்று விட்டது.

தாராபுரத்தில், மதுராந்தகத்தில், தட்டாஞ்சாவடியில் ஒரு காசுகூட நாங்கள் கொடுக்கவில்லை என தி.மு.க. சத்தியம் செய்து கொடுக்கும். ஆனால் இந்த மூன்று ஊரிலும் த.வெ.க. கூட்டணியோ, அ.தி.மு.க. கூட்டணியோ 10 காசு தரவில்லை என்று சத்தியம் செய்து கூறுவீர்களா? உங்கள் மனசாட்சிக்கே விட்டுவிடுகிறேன். 5 நிமிடத்தில் கொத்துக் கறி போட்டேனென்று சொன்னீங்க. ஆனால் தலைகீழாத் தண்ணி குடிக்க மக்கள் வைச்சாங்க. தாராபுரத்தில் 30 கோடி செலவு செய்தேன் என்று த.வெ.க. வேட்பாளர் சொன்னார்கள்.

மாட்டு வண்டி ஓட்டினீங்க, டிராக்டர் ஓட்டினீங்க, ஆட்டுச் சந்தையில் சென்று ஆடுகளை விரட்டினீங்க. ஆளும் கட்சி பலம், முதல்வரின் 4 நாள் டூர், அத்தனை அமைச்சர்களும் பிரச்சாரம், டிபன் பாக்சில் 5,000 பணம் கொடுத்தும், பெரிய கட்சிகளுடன் கூட்டணி இருந்தும் த.வெ.க.வால் இத்தனைக்குப் பிறகும் மொத்தத்தில் பாதிக்குமேல் வாக்குகளைப் பெற முடியவில்லை என்கிற வருத்தமே இல்லையா?

மொத்த மாநிலத் தேர்தலில் 15 நாள்தான் விஜய் பிரச்சாரம் சென்றார். இங்கே தொகுதிக்கு இரண்டு நாள், தொகுதிக்கு 40 இடம் பிரச்சாரம், தாய்மாமன் சீர், விடியல் பயணத்திட்டம் என பல திட்டங்கள் தேர்தல் விதிமுறை மீறி, தேர்தல் நேரத்தில் நடைமுறைப்படுத்தியும், வாக்கு உயரவில்லை என த.வெ.க.விற்கு வெட்கமாக இல்லையா?

அ.தி.மு.க. தீர்ந்துபோன கட்சி என்று சொன்னோமே. தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டு என்று சொன்னோமே, எதுவுமே நிரூபிக்க முடியவில்லை என்று வெட்கமாக இல்லையா?

கூட்டணி கட்சியால்தான் தி.மு.க. வென்றது என்று சொன்னோமே? இப்போது தி.மு.க.வுடன் தே.மு.தி.க. தவிர கூட்டணி இல்லை. ஆனாலும் இடைத்தேர்தலில் தி.மு.க.வின் வாக்கு வங்கி குறையவில்லை.

அறிவாலயத்தை வாடகைக்கு விடவேண்டியதுதான் என்று நிர்மல் குமார் சொன்னாரே அந்த தி.மு.க. அ.தி.மு.க. கோட்டையான பகுதிகளில் இரண்டாம் இடத்தில் வாக்கு வாங்கியுள்ளது. அதுவும் ஆளும் கட்சியின் ஆளுயர புயலில், கொஞ்சம்கூட தி.மு.க. அசையவே இல்லையே! இது த.வெ.க.விற்குக் கொஞ்சம்கூட வெட்கமாக இல்லையா?

தமிழ்நாட்டில் ஒரு கோடி வாக்குகள் நீக்கப்பட்ட கூத்தில், தி.மு.க. மட்டும் எடுத்த சட்ட நடவடிக்கையால் 20 லட்சம் வாக்குகள் மீண்டும் சேர்க்கப்பட்டன. தி.மு.க. தலையிடாமல் இருந்தால் 3 கோடி மக்களின் வாக்கு பறிக்கப்பட்டு இருக்கும்.

தி.மு.க. ஆளும் மாநிலமாக, இருப்பதால் தமிழகத்தின் அதிகாரிகள் நினைத்தால் தடுக்க முடியுமாம். மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கு என எவனும் சொல்ல மாட்டான், வளர்ந்துகெட்ட முட்டாளைத் தவிர.

மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. சம்பளம் மாநில அரசுதான் கொடுக்கிறது. ஆனால் ஒன்றிய அரசை எதிர்த்து, மாநில அரசுக்கு அதிகாரிகள் வேலை செய்ய மாட்டார்கள். அப்படி வேலை செய்தால் ஜிஎஸ்டி வரியைத் தமிழ்நாட்டிலேயே வசூலித்து, தமிழ்நாடே எடுத்துக் கொள்ளலாமே?

வசூலிப்பது தமிழக அதிகாரிகள்தானே. நம் பங்கைக் கூட நாமே எடுத்துக்கொள்ளமுடியாது. ஒன்றியம் வாங்கிக்கொண்டு, அவர்கள் நினைக்கும்போதுதானே நாம் ஒரு ரூபாய் தந்தால் 29 காசு தருகிறார்கள். நமக்கு அதிகாரம் இருந்தால் நீட் தேர்வு அதிகாரிகளைத் தடுத்து நிறுத்தி இருக்க முடியுமே. நீட்டையே நுழையவிடாமல் தடுக்க முடியும்.

எஸ்.ஐ.ஆர் பணியில் 90 ஆயிரம் வாக்காளர்களை நீக்கிய தொகுதியில் அனைத்திலும் த.வெ.க. வெற்றி பெற்று உள்ளது.

எஸ்.ஐ.ஆர். பணியில் குறைவான அளவு வாக்குகள் நீக்கிய தொகுதிகளில் த.வெ.க. தோற்றுள்ளது.

த.வெ.க. அரசு இந்த இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வினருக்கு, பா.ம.க.வினருக்கு ஆட்சி ஆசை காட்டி 13.82% வாக்குகளை இழுத்துள்ளது.

விடுதலை சிறுத்தைகள், காங்கிரஸ், முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட்கள் போன்ற தோழமைகள் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் நம்முடன் கூட்டணியில் இல்லாத சூழலிலும் தி.மு.க.விற்கு வாக்கு அதிகரித்து இருக்கிறதே தவிர தி.மு.க.விற்கு வாக்கு குறையவில்லை. இது எதைக்காட்டுகிறது என்றால், தோழமைகளின் தலைமை மாறினாலும், தோழமையின் தொண்டர்கள் நம்மிடம்தான் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அ.தி.மு.க. உடைபடாமலிருந்தால் தி.மு.க.தான் வென்று இருக்கும்.

நாம் மேற்படி தோழமைக் கட்சிகளுக்காக சென்ற தேர்தலில் கொடுத்த சீட் 23+8+5+5+4+2=47 சீட்டுகளில் இனி கழக தோழர்களே நின்றால் வெற்றி எண்ணிக்கை அதிகரிக்கும்.

இஸ்லாமியர் அதிகமாக இருக்கும் சேப்பாக்கம், துறைமுகம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை போன்ற தொகுதிகளில் தி.மு.க. வென்றதற்கு இஸ்லாமியர்களும் காரணம். அதே நேரத்தில் I.U.M.L. அல்ல என்பதை இந்த தேர்தல் நிரூபித்திருக்கிறது.


இந்த இடைத்தேர்தலில் சல்லிக்காசு கொடுக்காமல், கூட்டணி இல்லாமல் தி.மு.க. பெற்ற வாக்கிற்காக நாம் பெருமை கொள்கிறோம்.

அதே நேரத்தில் வி.சி.க. பா.ம.க. காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆதரவு இல்லை என்றால் ஆளும் கட்சியாக இருந்தும் த.வெ.க. தோற்றது என்கிற பெயர் வந்திருக்கும். கூட்டணி பலத்திலும், காசைக் கொட்டிக் கொடுத்ததிலும், அதிகாரமிரட்டலிலும்தான் த.வெ.க. வென்றது.

கடந்த 2026-ல் அ.தி.மு.க.வை நம்பிப் போன சத்யபாமா ஏறத்தாழ 17,000 வாக்குகளில் வென்றவர் என்கிற காலம்போய் த.வெ.க. வேட்பாளராக நின்று வெறும் 9,000 வாக்குகளில் மட்டுமே வென்று உள்ளார் என்ற நிலை உருவாகியுள்ளது. 2026-ல் அ.தி.மு.க.வில் 81,100 வாக்குகள் பெற்றுவிட்டு, அக்டோபர் இடைத்தேர்தலில் 66,184 வாக்குகள் பெற்றிடவா விஜய் கட்சிக்கு சத்யபாமா சென்றார்.

ஜான் ஏறி, முழம் சறுக்கிய கதையாய் சத்யபாமா நிலை. இந்த அவமானத்துக்காக த.வெ.க.வினர் வெட்கப்படவேண்டாமா? இதற்குத்தான் விஜய் கட்சிக்கு சத்யபாமா வந்தாரா? 30 கோடி செலவு செய்தாரா? அழுது புரண்டாரா?

விமானத்தில் கூட பக்கத்தில் யாரையும் நம்பாமல், அமரவிடாமல் தனிவிமானத்தில் பலகோடி செலவில் டெல்லிக்கே செல்லும் விஜய், 5000 ரூபாய் செலவில் மேட்டூரில் பூத்தூவுவதற்கு பதிலாக தனிவிமானத்தில், 5 கோடி செலவு செய்து மேட்டூருக்கு தனியாக சென்ற விஜயினை 10 பேருடன் மாட்டு வண்டியில் இடித்துக் கொண்டும், டிராக்டரில் 10 பேருடன் தொங்கவிட்டும் கேவலமான பார்ட்டரில் ஜெயிக்க வைத்தது வெட்கமாக இல்லையா?



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

மதுராந்தகத்தில் பா.ம.க.வை கூட்டணியாக சேர்த்தும் இவ்வளவுதான் நாம்பெற்ற வாக்குகளா என்று வெட்கமாக இல்லையா?

தன் கட்சியில் இல்லாத ஜெயலலிதா படத்தை வைத்துக்கொள்ள செங்கோட்டையனுக்கு அனுமதி கொடுத்தும், அதைப்பார்த்த பலநூறு தொண்டர்கள் ஜெயலலிதா படம் வைக்க அனுமதித்தும், த.வெ.க.விற்கு வாக்கு குறைவு என்பது வெட்கமாக இல்லையா?

த.வெ.க. ஒரே மாவட்டத்தில் வேட்பாளரை போட்டும், தி.மு.க. சென்னையிலிருந்து நிறுத்தியும், த.வெ.க. வேட்பாளர் ஒரே மாவட்டம் என்பதுடன், இருமுறை M.L.A., ஒருமுறை M.P. என செல்வாக்கு பெற்று இருந்தும், இது தான் வாக்கு வித்தியாசமா என த.வெ.க.வினருக்கு வெட்கமாக இல்லையா?

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வின் வேலுமணி, தங்கமணி வேலைபார்க்காமல் ஒதுங்கியிருந்தனர் என்று சொல்லகூடாது. வேலை செய்தார்கள், த.வெ.க.விற்காக வேலை செய்தார்கள்.

தாராபுரத்தில் பழைய சட்டமன்ற உறுப்பினர் சத்யபாமா, ஒவ்வொரு கிராமமும் தெரிந்தவர். அதுமட்டுமல்ல அ.தி.மு.க.விலிருந்து முன்னாள் எம்.பி.யும், முன்னாள் மாவட்ட செயலாளருமான ராமலிங்கம், முன்னாள் அமைச்சர் ஆனந்தன், முன்னாள் அமைச்சர் ராதாகிருஷ்ணன் அதிகாரப்பூர்வமாகவும் தங்கமணி, வேலுமணி மறைமுகமாகவும் வேலை பார்த்தும் கேவலமான வித்தியாசத்தில் வென்றாரே என த.வெ.க.வுக்கு வெட்கமாக இல்லையா?

அமைச்சர் பொறுப்பை வழங்கி, விடுதலை சிறுத்தைகளின் தலித் ஓட்டுகளை த.வெ.க. பெற்றாலும், பா.ம.க. கட்டளைப்படி விடுதலைச் சிறுத்தைகளுடன் ஒரே மேடை ஏறுதலைத் தவிர்த்து வன்னியர் ஓட்டுகளைப் பெற்றும் இவ்வளவுதான் வாக்கா? வெட்கமாக இல்லையா?

மதுராந்தகத்தின் வேட்பாளர் முன்னாள் எம்.பி. சிட்டிங் எம்.எல்.ஏ. மேலும் பா.ம.க.வும், சி.வி.சண்முகமும் இருந்ததால்தான் மதுராந்தகத்தில் இந்த வெற்றி கிடைத்தது என்ற வெட்கம் த.வெ.க.விற்கு இல்லையா?

விடியல் பயணம் விரிவாக்கம், காலை உணவு விரிவாக்கம், அண்ணன் சீர், தாய்மாமன் சீர் இவ்வளவு இருந்தும் இந்த தேர்தல் முடிவுகள் என்ன தருகிறது என்றால்,

இனி விஜயினை நம்பி அ.தி.மு.க.வினர் த.வெ.க.விற்கு செல்லுகின்ற எண்ணத்திற்கு கதவு சாத்தப்பட்டுவிட்டது. விஜய் 10 நாள் பிரச்சாரம் செய்து, ஜெயிக்க வைக்கிறேன் என்று விஜய் சொன்னாலும், விஜய் சொல்வதை இனி யாரும் நம்பி இராஜினாமா செய்யமாட்டார்கள்.

அடேங்கப்பா, சத்யபாமா, மரகதம் குமரவேல் இடைத்தேர்தலில் தண்ணீர் குடித்ததைப் பார்த்த வேறு அ.தி.மு.க.வினருக்கு இராஜினாமா எண்ணம், தைரியம் வராது. ஆளும் கட்சி, பெரிய சக்தி விஜய் என்கிற பிம்பம் உடைபட்டுள்ளது. விஜய் கூட்டத்தை எதிர்கட்சிகள் ஒற்றுமையாக, கடினமாக வேலை பார்த்தால் துரத்தி எரியலாம் என்கிற நம்பிக்கையை எதிர்கட்சிகளுக்கு விதைத்த தேர்தல் இந்த தேர்தல். ஈ.வி.எம். மிஷின், S.I.R., ஆளும்கட்சி அதிகாரபலம், பணபலம் இருந்தும், தளபதி ஸ்டாலின் சொன்னதுபோல வெற்றியில் த.வெ.க. தோல்வியை அடைந்துள்ளது. தோல்வியில் தி.மு.க. வெற்றியை அடைந்துள்ளது!!

இவ்வாறு கவிஞர் காசிமுத்துமாணிக்கம் கூறியுள்ளார்.